## 30-ஆம்ஆண்டு - 25 அக்டோபர் 2026

*முதல்வாசகம்: விப 22:20–26*
*இரண்டாம்வாசகம்: 1 தெசலோனிக்கர் 1:5c–10*
*நற்செய்தி: மத்தேயு 22:34–40*

### முன்னுரை

ஒருமுறை பயணி ஒருவர் முதிய துறவியிடம், "வாழ்க்கையில் மிக முக்கியமான காரியம் எது?" என்று கேட்டார். துறவி உடனடியாக பதிலளிக்கவில்லை. அதற்குப் பதிலாக, அவரை ஒரு கிணற்றடிக்கு அழைத்துச் சென்று, நீர் எடுத்து குடிக்கக் கொடுத்தார். தாகத்தில் இருந்த அந்தப் பயணி நீரை ஆவலோடு பருகினார்.

அப்போது துறவி புன்னகையோடு, "உமக்குத் தாகம் எடுத்தபோது தண்ணீரைவிட வேறு எதுவுமே முக்கியமாகத் தோன்றவில்லை. அதுபோலவே, ஆன்மா தாகத்தோடு இருக்கும்போது அன்பைத் தவிர வேறு எதுவுமே முதன்மையானதாக இருப்பதில்லை" என்றார்.

இன்றைய நற்செய்தியில் இயேசு நமக்கு வாழ்க்கையின் மிக முக்கியமானதைச் சுட்டிக்காட்டுகிறார்:

நம் முழு இருதயத்தோடும், முழு ஆன்மாவோடும், முழு மனத்தோடும் கடவுளிடத்தில் அன்புகூர்வதும், நம்மை நாமே அன்பு செய்வது போல நம் அயலாரையும் அன்பு செய்வதுமே நிறைவானதாகும்.

கிறிஸ்தவ வாழ்வில் எல்லாமே இங்குதான் தொடங்குகின்றது. விசுவாசம் என்பது வெறும் சட்டங்களோ அல்லது சடங்குகளோ அல்ல; அது நம்மை முதலிலே அன்பு செய்த இறைவனோடு நாம் கொள்ளும் உறவுநிலை. இறைவனின் அன்பு நம்மைச் சூழ்ந்திருக்கிறது என்பதை நாம் உணரும்போது, நம் இதயம் மாறத் தொடங்குகிறது.

ஜெபம் உயிரோட்டம் பெறுகிறது; இரக்கம் இயல்பாகிறது; மன்னிப்பு சாத்தியமாகிறது. அன்பே எல்லாவற்றையும் சரியான இடத்தில் வைக்கும் "முதல் பொத்தான்" (First Button) ஆகும்.

இருப்பினும், கிறிஸ்து நம்மிடம் எதிர்பார்க்கும் அன்பை வெளிப்படுத்த நாம் பல நேரங்களில் தவறிவிடுகிறோம். இறைவனை முழுமையாக அன்பு செய்யாமலும், அயலாரை தாராள மனதோடு அன்பு செய்யாமலும், இறைவனின் அன்பை ஏற்றுக்கொள்வதில் தயக்கம் காட்டியும் வாழ்கிறோம். எனவே, நமது பலவீனங்களை ஏற்றுக்கொண்டு, இறைவனின் இரக்கத்தையும் குணமளிக்கும் அருளையும் தாழ்மையோடு மன்றாடுவோம்.

## மறையுரை

ஆசிரியை ஒருவர் தம் மாணவர்களிடம், “மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு மிக முக்கியமான விதி எது?” என்று எழுதி தருமாறு கேட்டார்.

ஒரு குழந்தை, “எப்போதும் உண்மையைப் பேசுவது” என்றது.

இன்னொன்று, “கடினமாக உழைப்பது” என்றது.

மூன்றாவதாக ஒரு குழந்தை, “அன்பாக இருப்பது” என்று எழுதியது.

ஆனால் ஒரு சிறுவன் மட்டும், “முதலில் அன்பு செய்” என்று சுருக்கமாக எழுதியிருந்தான்.

ஆசிரியை அவனிடம் இதன் பொருள் என்னவென்று கேட்டபோது, அவன், “நாம் முதலில் அன்பு செய்துவிட்டால், மற்ற காரியங்கள் எல்லாமே எளிதாகிவிடும்” என்றான்.

அந்தச் சிறுவன் என்ன சொல்கிறான் என்று அறியாமலேயே, அவன் இன்றைய நற்செய்தியின் மையக் கருத்தைப் புரிந்துகொண்டான்.

இன்றைய நற்செய்தியில் பரிசேயர் இயேசுவைச் சோதிக்கும்படி, “போதகரே, திருச்சட்டத்திலேயே மிக முக்கியமான கட்டளை எது?” என்று கேட்கிறார்கள்.

இயேசு ஒவ்வொரு யூதரும் மனப்பாடமாக அறிந்திருந்த வார்த்தைகளையே பதிலாகக் கூறுகிறார்:

“உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆன்மாவோடும், உன் முழு மனத்தோடும் உன் ஆண்டவராகிய கடவுளிடத்தில் அன்புகூர்வாயாக.”

தொடர்ந்து, “உன்னை நீ அன்பு செய்வதுபோல உனக்கு அடுத்திருப்பவரையும் அன்புகூர்வாயாக”

என்ற இரண்டாம் கட்டளையையும் இணைத்துக் கூறுகிறார்.

மேலும் இயேசு, “இவ்விரு கட்டளைகளில்தான் திருச்சட்டம் முழுவதும் இறைவாக்குகளும் அடங்கியுள்ளன” என்று மிக ஆழமான ஒரு உண்மையைக் கூறுகிறார்.

### அன்பே முதன்மையான பொத்தான்

ஒரு குருடன் சிறுவயது அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டார். சிறுவயதில் பள்ளிக்கு அவசரமாகக் கிளம்பும்போது, சட்டைப் பொத்தான்களை தவறாகப் போட்டுவிடுவாராம். முதல்

பொத்தானை தவறான துளையில் போட்டுவிட்டால், அதற்குப் பின் வரும் அனைத்துப் பொத்தான்களும் தவறாகவே அமையும். சட்டை ஒரு புறமாக இழுத்துக்கொண்டு அசௌகரியமாக இருக்கும்.

அப்போது அவருடைய தாய், “முதல் பொத்தானை சரியாகப் போடுவதில் கவனமாக இரு. முதல் பொத்தான் சரியாக அமைந்துவிட்டால், மற்றவை தானாகவே சரியான இடத்திற்கு வந்துவிடும்” என்பாராம்.

இயேசு இன்றைக்கு நமக்குக் கூறுவதும் இதுவே. கிறிஸ்தவ வாழ்வின் “முதல் பொத்தான்” அன்பாகும். அன்பு சரியாக இருக்கும்போது, வாழ்க்கையின் மற்ற எல்லாக் காரியங்களும் மெதுவாக சரியான இடத்திற்கு வந்துவிடும்.

அன்பு இல்லாதபோது சமயம் என்பது ஒரு சுமையாகிவிடும்; ஜெபம் என்பது கடமைக்காகச் செய்யும் வழக்கமாகிவிடும்; வழிபாடு ஒரு நிர்பந்தமாகிவிடும்; நன்னெறி என்பது வெறும் குளிர்ந்த சட்டமாகிவிடும். ஆனால் அன்பு இருக்கும் இடத்தில், விசுவாசம் உயிரோட்டம் பெறுகிறது.

ஒரு குடும்பத்தில் சிறுவயதில் மிகவும் ஒழுங்கீனமாக, அறையை அசுத்தமாக வைத்திருந்த ஒரு இளைஞன் இருந்தான். தண்டனை, அறிவுரை, இராணுவப் பயிற்சி எதுவுமே அவனை மாற்றவில்லை. ஆனால், அவன் ஒரு பெண்ணை தீவிரமாகக் காதலிக்கத் தொடங்கியபோது எல்லாம் மாறியது!

அவள் வீட்டிற்கு வரும்போதெல்லாம் அவனுடைய அறை மிகவும் சுத்தமாக இருந்தது. சட்டங்களாலும் அச்சுறுத்தல்களாலும் செய்ய முடியாத மாற்றத்தை அன்பு மிக எளிதாகச் செய்தது.

அன்பு நம்மை மாற்றுகிறது.

தூய அகஸ்டின், “அன்பு செய், பின் உனக்கு விருப்பமானதைச் செய்” என்றார். இதன் பொருள் கண்டபடி வாழ்வது அல்ல; நம் இதயம் உண்மையாகவே இறைவனை அன்பு செய்யும்போது, நம்முடைய தேர்வுகளும் செயல்களும் சரியான திசையை நோக்கி இயல்பாகவே நகரத் தொடங்கும் என்பதாகும்.

**அன்பைக் கட்டளையிட முடியுமா?**

இங்கே ஒரு கேள்வி எழலாம்: அன்பை எப்படி கட்டளையிட முடியும்?

ஒரு தாய் தன் குழந்தையிடம் “என்னை அன்பு செய்” என்று கட்டாயப்படுத்த முடியாது. கணவன் தன் மனைவியிடம்

அன்பை அதிகாரத்தினால் பெற முடியாது. அன்பை மின்சார விளக்கைப் போல சட்டென்று போட்டுவிட முடியாது.

இதற்குத் தூய யோவான் அருமையான விளக்கம் தருகிறார்: "அவரே முதலில் நம்மிடம் அன்பு செலுத்தியதால் நாமும் அன்பு செலுத்துகிறோம்."

கிறிஸ்தவம் என்பது கடவுள் மீது நாம் செலுத்தும் அன்பில் தொடங்குவதில்லை; நம்மீது கடவுள் செலுத்தும் அன்பில்தான் தொடங்குகிறது.

பலர் புனிதமடைவது என்பது "கடினமாக முயற்சிப்பது" என்று நினைக்கிறார்கள். ஆனால் நற்செய்தி நமக்குச் சொல்வது: கடவுளின் அன்பை நம் வாழ்வில் ஏற்றுக்கொள்வதே புனிதம்.

**நிகழ்வு 1**

தேவாலயத்திற்குச் செல்வதை நிறுத்திய ஒரு இளம்பெண், இளைஞர் தியானக் கூட்டத்தில் பங்கேற்றபோது கிறிஸ்துவின் அன்பை ஆழமாக உணர்ந்தாள். அதற்குப் பின் தினமும் திருப்பலியில் பங்கேற்கத் தொடங்கினாள். முன்னதாக சுமையாகத் தெரிந்த வழிபாடு, இப்போது அன்பு செய்யும் இறைவனைச் சந்திக்கும் இனிய நேரமாக மாறியது.

**நிகழ்வு 2**

நற்கருணைப் பயிற்சி வகுப்பில், குரு சிறுவர்களிடம் "இயேசுவே, உம்மை நேசிக்கிறேன்" என்று தினமும் ஜெபிக்குமாறு கூறினார்.

ஒரு சிறுவன், "எனக்கு இயேசுவைத் தெரியாதே, அப்புறம் எப்படி அவரை நேசிப்பது?" என்று அழுதான். குரு அவனிடம், "அப்படியானால், 'இயேசுவே, என்னை நேசிப்பதற்காக உமக்கு நன்றி' என்று ஜெபி" என்றார். மூன்று நாட்களுக்குப் பின் அவன் ஓடிவந்து, "இப்போது என்னால் இயேசுவை நேசிக்க முடிகிறது!" என்றான்.

நம் இதயம் ஒரு காய்ந்த பஞ்சைப் போன்றது. காய்ந்த பஞ்சைப் பிழிந்தால் நீர் வராது; அதை நீரில் ஊறவைத்து பிழிந்தால் நீர் தாராளமாக வழியும். அதுபோலவே, பயத்தாலும், சுயநலத்தாலும், ஏமாற்றத்தாலும் காய்ந்துபோன நம் இதயம் சுய முயற்சியால் அன்பைப் பொழிய முடியாது. முதலில் இறைவனின் அன்பில் தோய்க்கப்பட வேண்டும்

**உடைந்த பாத்திரமும் இறை அருளும்**

இன்றைய உலகில் எல்லாமே இருக்கிறது; ஆனால் இதயங்கள் அன்பிற்காக இயங்குகின்றன. சமூக ஊடகங்களில் இணைந்திருந்தாலும் ஆன்மீக ரீதியாக தனிமையில்

வாழ்கிறார்கள். ஒரே கூரையின் கீழ் வாழ்ந்தும் பேசிக்கொள்வதில்லை. உலக அளவில் நாடுகள் பணக்காரர்களாக மாறினாலும் மனித உறவுகள் குளிர்ந்துபோகின்றன.

இத்தகைய உலகிற்கு இயேசு கட்டளையிடுகிறார்: "கடவுளை அன்பு செய். அயலாரை அன்பு செய்."

முதல் வாசகம் நினைவூட்டுவது போல, இந்த அன்பு வெறும் உதட்டளவுப் பேச்சு அல்ல. அது எளியோர், விதவைகள், ஆதரவற்றோர், ஏழைகள் ஆகியோரிடம் காட்டும் இரக்கத்தில்தான் செயலாக்கம் பெறுகிறது.

மேலும், "உன்னை நீ அன்பு செய்வதுபோல அயலாரையும் அன்பு செய்" என்பதில் நம்மை நாமே அன்பு செய்வதும் அடங்கும். பலர் தங்களையே வெறுப்பதால் மற்றவர்களை அன்பு செய்ய முடியாமல் போகிறது. ஆனால் இறைவன் நம்மைப் பழியோடு பார்ப்பதில்லை; இரக்கத்தோடு பார்க்கிறார்.

துறவி ஒருவர் உடைந்த களிமண் கோப்பையில் தேநீர் ஊற்றிக்கொடுத்து, "உடைந்த கோப்பையாலும் தேநீரைத் தாங்க முடியும் என்றால், காயப்பட்ட உடைந்த இதயங்களாலும் இறை அருளைத் தாங்க முடியும்" என்றார்.

கடவுள் நாம் முழுமையடையும் வரை காத்திருந்து அன்பு செய்வதில்லை. அவர் நம்மை இப்படியே அன்பு செய்கிறார்; அந்த அன்பே நம்மைப் படிப்படியாக மாற்றுகிறது.

இன்று இயேசு நம்மிடம் கேட்பதெல்லாம் ஒன்றுதான்: முதல் பொத்தானில் தொடங்குங்கள்.

இறைவனின் அன்பை அனுபவியுங்கள். ஜெபத்திலும், நற்கருணையிலும், இறை வார்த்தையிலும் அவரோடு இணைந்து இருங்கள். அந்த அன்பிலிருந்து பிறக்கும் இரக்கம் உங்கள் குடும்பத்திற்கும், பணிபுரியும் இடத்திற்கும், உங்களைச் சுற்றியுள்ள மக்களுக்கும் பரவட்டும்.

மின்சாரம் தடைப்பட்டபோது ஒரு பாட்டி ஜன்னலில் ஒரு மெழுகுவர்த்தியை ஏற்றி வைத்தார். அதைக் கண்டு அண்டை வீட்டார்களும் தங்கள் மெழுகுவர்த்திகளை ஏற்றினர். இருள் மெதுவாக விலகி, ஊரே ஒளிமயமானது.

நாம் ஒளியை உருவாக்குபவர்கள் அல்ல; கிறிஸ்துவிடமிருந்து ஒளியைப் பெற்று பிறருக்குக் கொடுப்பவர்கள். அன்பே எல்லாவற்றிற்கும் அடிப்படை. **ஆமென்.**

**Prepared by:** Fr. Paul Julian, Perth, Australia

**Translated by:** Leonard Arulandhu, Holy Family Church, Chennai